2024 ஜூன் 29]

பிறகு செல்கிறேன். விடுமுறை வாரமாக இருந்தாலும், இரண்டு நாட்களில் என்னைப் பார்ப்பதற்கு 100 தமிழர்கள் விண்ணப்பித்திருக்கிறார்கள். அந்தளவிற்குத் தமிழ்ப்பற்று உள்ளவர்கள், வரலாறுமீது ஆர்வம் உள்ளவர்கள் அங்கு இருக்கிறார்கள். அதனால், நிதியை ஒரு பொருட்டாகக் கருதாமல், வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான திட்டங்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். ஏற்கெனவே சென்ற ஆண்டு 100 சதவிகிதம் அதிகமான IT space-*ஐ ஏற்படுத்தினோம். அதில்,* TANFINET *ஒரு பங்கு;* PPP model *ஒரு பங்கு; முதலீட்டாளர்கள் நிதி ஒரு பங்கு என இவற்றையெல்லாம் ஒருங்கிணைத்து, இன்னும் ஓராண்டில் வளர்ச்சியை மேம்படுத்தி இந்தத் துறையைச் சிறப்பிப்போம் என்று தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மற்ற மாநிலங்களைவிட நிதி ஒதுக்கீடு குறைவாக இருந்தாலும், நம் மாநிலத்தில் கட்டமைப்பை மிக அதிகமாக உருவாக்கியிருக்கிறோம். பல ஆயிரம் கோடி ரூபாய் செலவில் தனியார் நிறுவனங்கள்மூலம் இங்கு கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதை உருவாக்கியதால், அந்த வாய்ப்பு நமக்கு ஏற்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

வினா வரிசை எண் 130, மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. *பாலாஜி, மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–35

130—

அடக்கஸ்தலம்

***94458—திரு. S.S. பாலாஜி:**

மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்போரூர் தொகுதி, மாம்பாக்கம் எல்லைக்குட்பட்ட பகுதியில் இஸ்லாமியர்களுக்கான அடக்கஸ்தலம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[*2024 ஜூன் 29*

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய பதிலை பேரவைக்கு அளிக்கின்றேன்.*

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர் வட்டம், மாம்பாக்கம் பகுதியில் வசித்து வருகின்ற 20–க்கும் அதிகமான முஸ்லிம் சமுதாய மக்கள் மாம்பாக்கத்திற்கு அருகில் உள்ள மேலக்கோட்டையூர், முஸ்லிம் அடக்கஸ்தலத்தைத் தற்போது பயன்படுத்தி வருகின்றனர். மாம்பாக்கம் கிராமம் புலம் எண் 113–ல், மொத்த பரப்பளவு 0.17 ஹெக்டேர் அரசுப் புறம்போக்கு தரிசு நிலம், வனத் துறைக்கு அருகாமையில் உள்ளதாலும், அடக்கஸ்தலம் அமைக்க நிலம் வகைமாற்றம் செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கையை தொடர இயலாத காரணத்தினாலும், அப்பகுதியில் ஆட்சேபணை இல்லாத அரசுப் புறம்போக்கு நிலம் இல்லாத காரணத்தினாலும், வனத் துறை மற்றும் வருவாய்த் துறையுடன் இணைந்து சட்டவிதிகளுக்குட்பட்டு, கபர்ஸ்தான் அமைக்க இடம் வழங்குவதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், அரசு நிலம் இல்லாதபட்சத்தில் தனியாருக்குச் சொந்தமான இடம் இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்த இடத்தினுடைய உரிமையாளரிடத்தில் பேசி, அதற்குண்டான ஏற்பாடு செய்தால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், மக்கள் முதல்வர், மனித நேயத்தோடு வழங்கியுள்ள 1 கோடி ரூபாய் நிதியிலிருந்து, நிதிப் பங்களிப்பு கொடுத்து, அந்த இடத்தைப் பெற்றுத் தருவோம் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி அவர்கள்.*

திரு. S.S. பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாம்பாக்கம் பகுதியில் உள்ள இஸ்லாமிய குடும்பங்கள் மட்டுமல்ல, புதுப்பாக்கத்திலுள்ளவர்களும் தற்போது கேளம்பாக்கத்தில் உள்ள அடக்கஸ்தலத்தைப் பயன்படுத்தி வருகிறார்கள். ஏற்கெனவே, கேளம்பாக்கத்தில் உள்ள 800 குடும்பங்களும், பக்கத்திலிருக்கக்கூடிய தையூரிலிருந்து 400 குடும்பங்களும் இன்றைக்கு அடக்கஸ்தலத்திற்கு*

2024 ஜூன் 29]

*40 சென்ட் இடத்தைத்தான் பயன்படுத்தி வருகிறார்கள். நான் பணிவோடு தெரிவித்துக்கொள்வது, இதில் ** இல்லாமல், 20 குடும்பங்கள் என்று வட்டாட்சியருடைய ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாக நான் கேட்டுக்கொள்வது, மீண்டும் அதை ஆய்வு செய்வதற்கு வட்டாட்சியரை பணித்தால், இந்த இடத்திலேயே வழங்குவதற்கான வாய்ப்பு இருக்கும் என்பதாகக் கருதுகிறேன்.*

மேலும், கேளம்பாக்கத்திலிருக்கக்கூடிய சாத்தான்குப்பம் பகுதியில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதிகாரிகள் குறித்து கூறியது நீக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர், உங்களுக்கு இன்னொரு கேள்வி இருக்கிறது.*

திரு. S.S. பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதனையும் அத்துடன் சேர்த்துவிடுகிறேன். சாத்தான்குப்பம் பகுதியிலும் இன்றைக்கு* byepass*-ல் இருக்கக்கூடிய இடத்தில், இந்துக்களுக்கான மயானம் இருக்கிறது; கிறித்தவர்களுக்கான கல்லறையும் இருக்கிறது. அதற்குப் பக்கத்திலேயே இஸ்லாமியர்களும் இடம் கேட்டிருக்கிறார்கள். அதனையும் ஒதுக்கித் தருமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நியாயமானது. மனிதன் வாழ்ந்து, நிறைவாக இறுதி பயணம் மேற்கொள்கின்ற நேரத்தில், அடக்கத்திற்குத் தேவையான இடத்தினை ஒதுக்கிக் கொடுப்பது நம்முடைய கடமை. அதனால்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஒரு கோடி ரூபாய் நிதியினையும் வழங்கியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் மீண்டும் அந்த ஆய்வை நடத்த கோரியிருக்கிறார். மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், வட்டாட்சியருக்கும், துறை சார்ந்த அந்தக் கடிதத்தை அனுப்பி, மீண்டும் அந்த

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

ஆய்வை செய்து, தேவைப்பட்டால் மாண்புமிகு உறுப்பினரும், நானும் நேரடியாக அந்த இடத்தினைப் பார்வையிட்டு, அந்த இடத்தினை ஒதுக்கிக் கொடுப்பதற்கு ஆவன செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி அவர்கள்.

திரு. S.S. பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக உருவாக்கப்படும் குடியிருப்புப் பகுதிகளில் பள்ளிவாசல்கள், தேவாலயங்கள், அடக்கஸ்தலங்கள், கல்லறைப் பூங்காக்கள் அமைப்பதை உத்தரவாதப்படுத்த அரசு முன்வருமா என்பதையும், ஏற்கெனவே பள்ளிவாசல்கள், தேவாலயங்கள் கட்டுவதற்கான SOP-ஐப் பின்பற்றுவதிலே மாவட்ட நிருவாகத்தில் சில இடர்பாடுகள் இருக்கின்றன. அவற்றையும் தீர்த்து வைப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள்

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் பொறுப்பேற்ற காலத்திலிருந்து தமிழகம் முழுவதும் பல்வேறு இடங்களிலுள்ள பிரச்சினைகளை, பள்ளிவாசல்கள், தேவாலயங்கள் அமைக்கின்ற பணியாக இருந்தாலும், அடக்கஸ்தலம், கபர்ஸ்தான் ஆகியவற்றில் இருக்கின்ற பிரச்சினைகளாக இருந்தாலும் அவற்றிற்கு தீர்வு காண்பதற்காகத்தான், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இரண்டு நாட்கள் இரண்டு கூட்டங்களை நடத்தி, அந்தக் கூட்டத்தின் வாயிலாகத் திட்டங்களை எளிதாக்கி, செயல்படுத்துவதற்கான வகையில் திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், ஏதேனும் பிரச்சினை இருந்தால், அதனை நேரடியாகச் சுட்டிக்காட்டினால், மாவட்ட ஆட்சித் தலைவரினுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, உடனடியாக அதற்குத் தீர்வு காண முடியும். அதேநேரத்தில் புதியதாகத் தேவாலயங்கள், பள்ளிவாசல்கள் கட்டுவதற்காகவும் சட்டங்கள் எளிமையாக்கப்பட்டதே தவிர, அவற்றிற்கு அரசு நிதியொதுக்கீடு வழங்கவில்லை. பழைய பள்ளிவாசல்கள்,

தேவாலயங்கள் ஆகியவற்றைப் பராமரிப்பதற்கு மட்டும்தான் நிதி வழங்கப்படுகிறது என்பதையும் மன்ற உறுப்பினர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள். சுருக்கமாக, கேள்வியை உள்வாங்கிக்கொண்டு பதில் சொல்லவும், please.

முற்பகல் 10–40

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றத் தேர்தல்களில், வெளிநாடு வாழ் தமிழர்கள் என்று நாம் வாக்களிக்கக்கூடிய வாக்காளர் பட்டியலில் பதிவாகி வருகிறது. இது அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தேவையான ஒரு பொதுவான கோரிக்கை, வினா. வெளிநாடு வாழ் தமிழர்கள் வாக்களிக்காமலேயே, பல சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல்கள் நடந்து கொண்டும் இருக்கின்றன. கடந்த முறையும் இதே வினாவினை நான் எழுப்பியிருந்தேன். ஏற்கெனவே இருக்கிற வாக்காளர் பட்டியல்களில் உள்ளவர்கள் வாக்களித்தே, திராவிட நாயகன் 40–க்கு 40, 100–க்கு 100 என்ற வெற்றியை நாடாளுமன்றத் தேர்தலில் அடைந்தீர்கள். வெளிநாட்டில் வாழ்கிற தமிழர்கள், தாய் திருநாடாம் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய மக்கள் பிரதிநிதிகளுக்கு வாக்களிக்க ஆவலாக இருக்கிறார்கள். ஆனால், தேர்தல் ஆணையம் இதுவரை அதற்கான எந்த முன்னெடுப்பும் செய்ததாக நாம் அறியவில்லை. எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் வைக்கின்ற வேண்டுகோள், வாக்காளர் பட்டியலில் உள்ள வெளிநாடு வாழ் தமிழர்கள், வரும் சட்டமன்றத் தேர்தலில் வாக்களித்தால், 40–க்கு 40 என்பதைப்போல், 200 plus என்று சொன்னார், நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். மன்னிக்க வேண்டும்; 200 plus அல்ல; 234–ம் நம்முடைய அணிதான் வெற்றி பெறும். அதற்கான வழிவகைகளைச் செய்வார்களா என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் கேட்டு அமர்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

[2024 ஜூன் 29

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு கொறடா அவர்களினுடைய கோரிக்கை நியாயமானது. ஜனநாயகத்தை வெற்றிகரமாக எடுத்துச் செல்வதற்காக, தேவையான அந்தக் குறிக்கோளை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, தேர்தல் ஆணையத்திற்கும், துறை சார்பாக இது குறித்து பரிந்துரை செய்யப்படும். இராணுவத்தில் பணிபுரிகிறவர்கள் எப்படி வாக்களிக்க உரிமை பெறுகிறார்களோ, அதேபோல், உலகமெங்கும் வாழ்கிற தமிழர்கள், வாக்களிக்கின்ற உரிமையை பெறுவதற்கு வழிவகை செய்வதற்குண்டான தொடர் முயற்சிகள், அரசு சார்பில் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா அவர்கள். சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள்.

திரு. JMH. அசன் மௌலானா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மனம் இருந்தால் மார்க்கம் உண்டு'. பல ஆண்டு காலமாக நமது கூட்டணி வேளச்சேரியில் இஸ்லாமியர்களிடம் சென்று, வாக்கு சேகரிக்கும்போது, ஒரே ஒரு கோரிக்கைதான் இருக்கிறது; எங்களுக்கு அடக்கம் செய்ய ஒரு கபர்ஸ்தான் தேவையென்றும், இதுவரை எங்களுக்கு அது கிடைக்கவில்லை என்றனர். மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுடைய தொகுதியான சைதாப்பேட்டை தொகுதியில், VHS Hospital ஆரம்பித்து, பெருங்குடி வரைக்கும் நிறைய காலியிடங்கள் எந்தத் தேவையும் இல்லாமல் உள்ளன. ஒரு இடம் compound சுவருடன் இருக்கிறது. ஆனால், அதுவெல்லாம் பயன்படுத்தப்படாத நிலங்கள். அவர்கள் use பண்ணுவதே கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, அரசின் கவனத்திற்கு அதைக் கொண்டு வந்து, செய்து தரவேண்டுமென்று கேளுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா அவர்கள்.

திரு. JMH. அசன் மௌலானா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களிடமும் letter கொடுத்துள்ளேன். Waqf வாரிய நிலங்கள் நான்கரை ஏக்கர் எடுக்கப்பட்டு,

2024 ஜூன் 29]

அடையார் bus depot *வந்துள்ளது. ஆனால், இஸ்லாமியர்களுக்கு ஒரு கபர்ஸ்தான் கேட்கும்போது கிடைப்பதில்லை. தயவுகூர்ந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துறையின் அமைச்சர் அவர்களுக்கும், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தெரிவித்து, ஒரு* joint survey *செய்து, இஸ்லாமியர்களுக்கென்று ஒரு கபர்ஸ்தான் தரவேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* Waqf *வாரியத்திற்குச் சொந்தமான இடத்தில் கபர்ஸ்தான் அமைத்துத் தர வேண்டுமென்ற சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையினை, உடனடியாக வருகின்ற காலங்களில் நடைபெறுகின்ற* Waqf *வாரியத்தின் கூட்டத்தில் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு, அந்த இடம் போதுமான அளவிற்கு ஒதுக்குவதற்கு வாய்ப்புள்ள இடமாக இருந்தால், உடனடியாக ஒதுக்கித் தருவதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவின் பெயரில் வழங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். (குறுக்கீடு) எல்லோரும் உட்காருங்கள். எல்லோருமே கவன ஈர்ப்புத் தீர்மானம் தந்திருக்கிறீர்கள். குறைந்த நாட்கள் சட்டமன்றக் கூட்டம் நடந்தாலும், காலை, மாலை இரண்டு வேளைகளிலும் எல்லா மானியக்*